DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.70/2018
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW3 (LW6)
Defence

Name : Periyasamy

Father Name /
Husband Name : Rathinam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 20th November 2025.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது திருவக்கரையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 6 வருடதத்திற்கு முன்பு முத்துக்கிருஷ்ணன் என்பவர் காலை 7.30 மாட்டு வண்டியில் மணல் ஏற்றிக்கொண்டு எறையூரில் இறக்கி கொண்டிருந்தார். அருகில் ராமமூர்த்தி , சிவகுமார் ஆகியோர் இறக்கி கொண்டிருந்தார்கள். நந்தகுமார் என்பவர் நான் மணல் இறக்கும் இடத்தில் நீ ஏன் இறக்குகிறாய் என்று முத்துக்கிருஷ்ணனை பார்த்து அசிங்கமாக பேசி மண்வெட்டியால் வலது கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். மணல் இறக்கிய வீட்டுக்காரர் அவரது

வீட்டில் அழைத்து வந்து விட்டார்கள். நான் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நானும் ஆஜர் எதிரியை ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் முன்விரோதம் உண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எங்களுக்குள் இருக்கும் முன்விரோதத்தை மனதில் வைத்திக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.